**Starting time 01.18 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 171/2018**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 09.01.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** வாதி, பிரதிவாதிகளுக்கு நான்தான் நிலம் விற்றேன் என்றால், ஆமாம். 16.02.1998-ல் நிலத்தையும், கிணற்றில் பாதியும் நான் அவர்களுக்கு விற்றேன் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் அனைத்தும் உண்மைதான் என்றாலும், நானும், வாதி, பிரதிவாதியும் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தோம் என்றால், ஆமாம். 16.02.1998-ல் வாதிக்கு தனியாக ஒரு கிரயமும், பிரதிவாதிக்கு ஒரு கிரயமும் நான் ஏற்படுத்தி கொடுத்தோன் என்றால், சரிதான். அந்த இரண்டு பத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் சரியானதுதான் என்றால், ஆமாம்.

2. அந்த சொத்தை வாதியும் பிரதிவாதியும் பொதுவாக கிரயத் தொகை செலுத்தி ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால், ஆமாம். கிரய தேதியன்று பிரதிவாதிக்கு 32 ½ செண்ட் ஆகவும், பெருமாளுக்கு 88 ½ செண்ட் ஒரு அயிட்டமும் 61 செண்ட் ஒரு அயிட்டமும் எழுதிக் கொடுத்தேன் என்றால், ஆமாம். புல எண் 206/4C ல்தான் கிணறு உள்ளது என்றால், ஆமாம். 16.02.1998 ல் கிரயப்பத்திரத்தில் பாதி கிணறு மட்டும் எழுதிக் கொடுத்தேன் என்றால், ஆமாம். வெங்கடாஜலத்திற்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில் உமக்கும் எங்களுக்கும் சிமெண்ட் பைப் பதித்து பொது கிணற்று தண்ணீரை எங்களுக்கு சொந்தமான இதர நிலங்களுக்கு தண்ணீர்

கொண்டு செல்ல உரிமை உண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால், ஆமாம்.

3. அந்த இதர நிலம் என்பது வாதி கிரயம் பெற்ற 32 ½ செண்ட் நிலம் அல்லாது மற்ற நிலங்கள் என்றால், என்னுடைய இதர நிலங்களுக்கும் வாதியின் 32 ½ செண்ட் நிலங்களுக்குதான் எடுத்து செல்ல இயலும். வாதியின் இதர நிலங்களுக்கும் எடுத்துச் செல்வதாகத்தான் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால், நான் அவ்வாறு எழுதிக் கொடுக்கவில்லை. என்னுடைய நிலங்களுக்குதான் எடுத்துச் செல்வதாக எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ-1-ல் பெருமாளுக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரத்தில் மேற்படி கிணற்றிலிருந்து நாங்களும், நாளது தேதியில் என்னிடம் இருந்து கிரயம் பெறும் வெங்கடாஜலமும், அவரவர் பாக கிணற்று நீரைமேற்படி 61 செண்ட் நிலத்தின் வழியாக எங்களுக்கு சொந்தமான இதர நிலங்களுக்கும் சிமெண்ட் பைப் பதித்து தண்ணீர் கொண்டு செல்லும் உரிமை என்று குறிப்பிடப்பட்டுள்து என்றால், ஆமாம்.

4. பொது கிணற்றிலிருந்து நிலத்தின் வழியாக தாவா கிணற்றிற்கு கிழபுறமுள்ள உலிபுரம் பஞ்சாயத்து சாலை வரை 370 அடி என்றால், ஆமாம். 03.06.2005 பெருமாளுக்கும் வெங்கடாஜலத்திற்கும் கிணற்றில் மீதி இருந்த பாதி பங்கையும் அவர்களுக்கே எழுதிக் கொடுத்து விட்டேன் என்றால், ஆமாம், அதையும் பொது செலவாகத்தான் செய்தார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 லும் பொது கிணற்றிலிருந்து உலிபுரம் பஞ்சாயத்து சாலை வரையிலும் 370 அடி நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ள சிமெண்ட் பைப்பிலும் பொதுவில் பாதி உள்பட பொது கிணற்றிலிருந்து மேற்படி சிமெண்ட் பைப் மூலமாக வெங்கடாஜலம் நிலத்திற்கு கொண்டு சென்று பாய்ச்சிக் கொள்ளும் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனன்றால். அந்த 32 ½ செண்ட் நிலத்திற்கு மட்டும்தான். பொது கிணற்றிலிருந்து பெருமாளுக்கு கிரயம் கொடுத்த 61 செண்ட் நிலமானது 200-வது அடியில் முடிந்து விடுகிறது என்றாலும், அதற்கடுத்தாகத்தான் 32 ½ செண்ட் நிலம் உள்ளது என்றால், சரிதான்.

5. 61 செண்ட் நிலத்திற்கு என்றால், 200-வது அடி வரையிலும்தான் உரிமை கொடுத்து எழுதியிருப்பேன் என்றாலும், 370 அடி என்றும் வெங்கடாஜலத்தின் இதர நிலத்திற்கும் சேர்த்துதான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கும் வெங்கடாஜலத்திற்கும் இடையே எத்தனை வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால், சுமார் 15 வருடங்கள்.

தற்போது வரையிலும் பொது கிணற்றிலுருந்து வெங்கடாஜம் நிலம் வழியாக பஞ்சாயத்து ரோடு வரையிலும் வந்து பொதுப்பாதை வழியாக இதர நிலமான புல எண். 207/5B வரையிலும் மேற்கு இறுதி வரையிலும் பைப் லைன் இருக்கிறது என்றால், ஆமாம்.

6. என்னுடைய அக்கா, எனது மனைவி, வெங்கடாஜலம் 03.06.2005 தேதியன்று பைப் லைன் சம்மந்தமாக ஒரு பத்திரம் எழுதிக் கொண்டார்பகள் என்றால், ஆமாம். அது எங்களுக்கு மட்டும் சொந்தமான பைப் லைன் ஆகும். அந்த பத்திரத்தில் எனது அக்காவும், எனது மனைவியும் புல எண். 207/5B-ல் பொது பாதையில் 450 அடி நீளத்திற்கு கிழமேலாக வெங்கடாஜலம் மேற்கு கோடி வரை வெங்கடாஜலத்தின் நிலத்திற்கு அடியில் புதைத்திருக்கும் சிமெண்ட் பைப் மூலமாக தண்ணீர் எடுத்துச் செல்லும் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் வெங்காஜலம் என் மனைவி, என் அக்கா ஆகியோர் பைப் லைனில் பழுது ஏற்பட்டால் அவரவர் சொந்த செலவில் பைப் பழுது பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது எனற்நல், ஆமாம்.

7. பெருமாள் சாட்சி சொல்ல அழைத்ததன் பேரில்தான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால், ஆமாம். பைப் லைன் மூலமாக தண்ணீர் எடுத்துச் செல்லும் பாத்தியப்பட்ட நிலங்கள் எனக்கு எதுவும் இல்லை என்றால், ஆமாம். எனது அக்காவிற்கும் உரிமை உண்டு, எனக்கு உரிமையே இல்லாத பைப் லைனுக்காக எனது அக்கா மற்றும் மனைவி மூலம் வெங்கடாஜலத்திற்கு இடையூறு ஏற்படுத்தினேன் என்றால், சரியல்ல. கிணற்றின் மீதி பங்கு குறித்தான பத்திரமும் பொது பாதை பத்திரமும் ஏறபடுத்தபட்டபோது நான் எனது அக்கா, எனது மனைவி, பெருமாள் உடனிருந்தோம் என்றால், ஆமாம்.

8. அந்த இரண்டு பத்திரமும் பதிவு செய்தது குறித்து அங்கு வந்திருந்த அனைவருக்கும் தெரியும் என்றால், ஆமாம். பொது கிணற்றிலிருந்து 370 அடி பஞ்சவாயத்து ரோடு வரையிலும் வந்து 450 அடி செல்லும் பைப் லைன் சம்மந்தமாக தான் 2 பத்திரமும் என்றால், அளந்து தான் எழுதினார்கள். எனவே இதர நிலம் என்று நான் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது வெங்கடாஜலத்திற்கு பாத்தியப்பட்ட புல எண். 207/5B ல் உடள்ள நிலம்தான் என்றாலும், நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.45 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.